# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2021-2022

## மானியக் கோரிக்கை எண்.53

## மு.க.ஸ்டாலின்
## முதலமைச்சர்

©

தமிழ் நாடு அரசு

2021

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | | 1 – 2 |
| 2. | துறையின் முக்கிய செயல்பாடுகள் | | 2 – 6 |
| 3. | கண்காணிப்பு | | 7 – 8 |
| | 3.1 | கொள்கை அறிவிப்புகளின் கண்காணிப்பு | 8 – 9 |
| | 3.2 | தலைமைச் செயலக உள்வலைய வழி நிகழ்நிலை கண்காணிப்பு | 9 – 10 |
| | 3.3 | முதன்மை திட்டங்களின் கண்காணிப்பு | 10 – 14 |
| | 3.3.1 | உயர்மட்ட கண்காணிப்பு குழு | 14 – 16 |
| | 3.4 | கருப்பொருள் அடிப்படையிலான (**Theme based**) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 16 – 17 |
| | 3.4.1 | நீர்வளங்களை மேம்படுத்துதல் | 17 – 19 |
| | 3.4.2 | வேளாண் உற்பத்தி, விளைச்சல் மற்றும் சந்தைப்படுத்துவதற்குரிய இணைப்புகளை உருவாக்குதல் | 19 – 21 |
| | 3.4.3 | அனைவருக்கும் வீடு | 22 – 23 |
| | 3.4.4 | கல்வி தரத்தை உயர்த்துதல் | 23 – 24 |

| வ. எண் | பொருள் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 3.4.5 | சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துதல் | 25 – 26 |
| | 3.4.6 | அனைவரும் உள்ளடங்கிய சமூகம் **(Social Inclusion)** | 26 – 27 |
| | 3.4.7 | உட்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சி | 27 – 28 |
| | 3.4.8 | திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு | 29 – 30 |
| | 3.4.9 | முறையான கடன் **(Institutional Credit)** | 30 – 32 |
| | 3.4.10 | மரபு மற்றும் பண்பாடு | 32 – 33 |
| | 3.4.11 | சுற்றுச்சூழல் சமநிலை | 33 – 34 |
| | 3.4.12 | தரவு நிருவாகம் **(Data Governance)** | 34 – 35 |
| | 3.5 | மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் | 35 – 38 |
| | 3.6 | கள ஆய்வுகள் | 38 |
| 4. | முக்கிய செயல் திறன் குறியீடுகள் **(Key Performance Indicators)** | | 39 |
| 5. | சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முன்முயற்சிகள் | | 40 |
| | 5.1 | முதலமைச்சர் முகப்புப் பலகை **(Chief Minister Dashboard)** | 40 – 41 |
| | 5.2 | முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம் **(Chief Minister Fellowship Programme)** | 41 – 42 |

| வ. எண் | பொருள் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| | 5.3 | மாணவர்களுக்கான நிருவாகச் செய்முறைப் பயிற்சித் திட்டம் **(Students Internship Programme)** | 43 – 44 |
| | 5.4 | ஒருங்கிணைந்த தரவுத்தளம் உருவாக்குவதற்கான விரிவான கணக்கெடுப்பு | 45 – 46 |
| | 5.5 | கள ஆய்வுகள் கண்காணிப்பு கைபேசி மென்பொருள் செயலி | 46 – 49 |
| 6. | முடிவுரை | | 49 – 50 |

# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2021 - 2022

## முன்னுரை

சமூக பொருளாதார நிலையில், மாநிலம் முழுமையான வளர்ச்சியினை அடைவதற்கான செயல்பாடுகளுக்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இவ்வகையில், தமிழ்நாட்டை ஒரு வளர்ந்த மாநிலமாக கட்டமைப்பதற்குரிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளுடனான வழிகாட்டியாக "தலை நிமிரும் தமிழகம்–தொலைநோக்குத் திட்டங்கள்" திகழ்கிறது. இதில், பத்தாண்டு காலத்திற்குள் வறுமைக் கோட்டிற்கு கீழ் எந்த குடும்பமும் இல்லை என்ற நிலையுடன், உயரிய பொருளாதார வளர்ச்சியினை அடைதல் மற்றும் சமூக நீதிக்கான

முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன், வேளாண்மை, நீர்வளங்கள், கல்வி, சுகாதாரம், நகர்ப்புர மேம்பாடு மற்றும் ஊரக உட்கட்டமைப்பு போன்ற முக்கிய பகுதிகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை உருவாக்குதல் ஆகியவற்றிற்கான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த அரசு தனது தொலைநோக்குத் திட்டங்களின் இலக்குகளை துரிதமாக செயல்படுத்துவதிலும், சமூகத்தின் அனைத்து பிரிவுகளும் அளப்பரிய பலன்களை பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் உறுதியாக உள்ளது.

## 2. துறையின் முக்கிய செயல்பாடுகள்

அரசால் அறிவிக்கப்படும் பல்வேறு முதன்மைத் திட்டங்கள் மற்றும் பிற

திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்கும் பொறுப்பு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முதன்மைப் பணியாகும்.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்கு பின்வரும் முக்கிய பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ அரசின் கண்காணிப்பு அமைப்பாக செயல்படுதல் மற்றும் செயல்பாட்டில் இருக்கும் திட்டங்களில் பெறப்படும் பின்னூட்டங்கள் அடிப்படையில் தேவையான திருத்தங்கள் வழங்குதல் / பரிந்துரைத்தல்.

❖ சட்டமன்றப் பேரவை மற்றும் முக்கிய அரசு விழாக்களில் அறிவிக்கப்படும் பல்வேறு முக்கிய கொள்கை அறிவிப்புகள் தொடர்பான ஆணைகள் சம்பந்தப்பட்ட துறைகளால்

வெளியிடப்படுவதையும், அவற்றை செயல்படுத்துவதையும் தொடர்ந்து கண்காணித்தல்.

❖ திட்டங்களை துரிதப்படுத்தவும், அதனால் ஏற்படும் பயன்களை மேலும் செம்மைப்படுத்தவும், தேவைக்கேற்ப துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.

❖ அரசின் "முதன்மை திட்டங்களின்" பயன் சரியான நேரத்தில் இலக்கு மக்களை சென்றடைவதை உறுதி செய்ய, தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து கண்காணித்தல்.

❖ செயல்படுத்தப்படும் திட்டங்களின் அளவறி கூறுகள் மற்றும் பண்பியல் கூறுகள் குறித்து அரசுக்கு செயற்குறிப்புகள் மற்றும்

தீர்வுகளுக்கான பரிந்துரைகள் தேவையான நேர்வுகளில் வழங்குதல்.

❖ மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் கள ஆய்வு அறிக்கைகள் மற்றும் ஆய்வு கூட்ட அறிக்கைகளை ஒருங்கிணைத்து அவற்றை அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் மூலமாக முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு அறிக்கையாக சமர்ப்பித்தல்.

❖ முதன்மைத் திட்டங்களின் குறிக்கோள்கள் முழுமையாக அடையப் பெறுவதை உறுதி செய்வதற்காக செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளில் தேவைப்படும் மேம்பாடுகள் மற்றும் திருத்தங்களை தொடர்புடைய

துறைகளோடு ஒருங்கிணைந்து பரிந்துரைத்தல்.

- ❖ பல்வேறு பகுதிகளில் பின்பற்றப்பட்டு வரும் முன்மாதிரி / சிறந்த முயற்சிகளை ஆய்வு செய்து அவற்றில் பொருத்தமானவற்றை தமிழ்நாட்டில் செயல்படுத்தத் தேவையான பரிந்துரைகளை வழங்குதல்.
- ❖ அவ்வப்போது அரசால் இத்துறைக்கு வழங்கப்படும் சிறப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

மேலே குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளுக்கு ஏற்ப, கள அனுபவம் மற்றும் கள நிபுணத்துவம் கொண்ட அலுவலர்கள் பல்வேறு தொடர்புடைய துறைகளிலிருந்து இத்துறைக்கு பணியமர்த்தப்படுகிறார்கள்.

### 3. கண்காணிப்பு

கண்காணிப்பு என்பது தகவல்களை முறையாக சேகரித்து, பகுப்பாய்வு செய்து அதன் மூலம் ஒரு திட்டத்தின் முன்னேற்றம் அதன் இலக்கை நோக்கி பயணிப்பதை உறுதி செய்வதோடு, திட்டத்தை செம்மைப்படுத்துவதற்கு தேவையான இடைநிலைத் திருத்தங்களை மேற்கொள்வது உள்ளிட்ட முக்கிய முடிவுகளை வழி நடத்துதல் ஆகும்.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சம்மந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து அரசு அறிவிக்கும் பல்வேறு திட்டங்களின் செயல் நிலையை சேகரித்து பதிவு செய்கிறது. முக்கிய ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கான முன்னேற்ற அறிக்கைகளை தயார் செய்கிறது. அரசு தலைமைச் செயலாளர் அவர்களால்

நடத்தப்படும் மாதாந்திர அனைத்து செயலாளர்கள் கூட்டத்திற்கு தேவையான அறிக்கைகளையும் தயார் செய்கிறது. அவ்வகையில், கண்காணிப்புத் தொடர்பான பின்வரும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

## 3.1. கொள்கை அறிவிப்புகளின் கண்காணிப்பு

சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு ஆளுநர் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மற்றும் இதர அரசு விழாக்களில்

அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் நிறைவேற்றத்தினை கண்காணிப்பதே சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முக்கிய பணியாகும்.

## 3.2 தலைமைச் செயலக உள்வலைய வழி நிகழ்நிலை கண்காணிப்பு

இத்துறை, தலைமைச் செயலகத்தில் உள்ள பல்வேறு அரசுத் துறைச் சார்ந்த அறிவிப்புகளின் நிலையை பதிவு செய்வதற்காக ஊடாடும் வலைப்பக்கத்தை (Interactive Webpage) வடிவமைத்து தலைமைச் செயலக உள்வலைய (Intranet) இணையத்தில் நிருவகித்து வருகிறது. பல்வேறு வகையான அறிக்கைகளை தயாரிக்கத் தேவையான பகுப்பாய்வு கண்காணிப்பு மென்பொருளும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தொடர்புடைய துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து அறிவிப்புகளின் நிலையினை உள்வலைய இணையப் பக்கத்தில் தொடர்ந்து பதிவு செய்திட ஏதுவாக அரசின் அனைத்து நிர்வாகத் துறைகளும் தங்கள் துறைச் சார்ந்த "தொடர்பு அலுவலர்களை" (Nodal Officer) நியமித்துள்ளன.

நிகழ்நிலை கண்காணிப்பில் பல்வேறு துறைகள் தெரிவிக்கும் முன்னேற்ற விவரங்களின் அடிப்படையில் அறிவிப்புகளின் நிலை வகைப்படுத்தப்பட்டு, தொகுப்பு அறிக்கைகள் உருவாக்கப்பட்டு, அவ்வப்போது நடத்தப்படும் பல்வேறு ஆய்வு கூட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

## 3.3 முதன்மை திட்டங்களின் கண்காணிப்பு

அரசின் உயர் மட்ட அளவில் தனிக்கவனம் செலுத்தி நேரடியாக

கண்காணிக்கப்பட வேண்டியத் திட்டங்கள் 'முதன்மை திட்டங்களாக' (Flagship Programmes) வகைப்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களின் செயல்நிலை முன்னேற்றம் குறித்து தொடர்புடைய துறைகளுடன் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் வாயிலாக திட்டங்களின் பலன்கள் எதிர்பார்த்த அளவில் முழுமையாக கிடைக்கப்பெறுவது உறுதி செய்யப்படுகிறது. அவ்வகையில் பின்வரும் திட்டங்கள் தற்போது நேரடி கண்காணிப்புக்கு முதன்மைத் திட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன:

1. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்.
2. முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்.

3. விதைகள் மற்றும் நாற்றுகள் விநியோகத் திட்டம் (வேளாண்மை மற்றும் தோட்டக்கலை).

4. ஊரகப் பகுதிகளில் வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல்.

5. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்.

6. வாழ்வாதார மேம்பாட்டுச் செயல்பாடுகள்.

7. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் வீட்டு வசதி மற்றும் சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள்.

8. பசுமை தமிழ்நாடு இயக்கம் .

9. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை திட்டங்கள்.

10. சிங்காரச் சென்னை 2.0

11. நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புர மற்றும் ஊரகம்).

12. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத்திட்டம் .

13. மக்களைத் தேடி மருத்துவம்.

14. வரும் முன் காப்போம் .

15. தமிழ்நாடு நகர்ப்புர சுகாதாரப் பாதுகாப்பு திட்டம்.

16. எண்ணும் எழுத்தும் இயக்கம்.

17. இணையவழி சேவைகள் மற்றும் அகண்ட அலைவரிசை இணைப்பு.

18. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்.

19. திருமண நிதியுதவி திட்டங்கள்.

20. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்கள்.

21. மாற்றுத்திறனாளிகளின் நலன்களுக்கான RIGHTS திட்டம் .

22. மீன்பிடி துறைமுகத் திட்டங்கள்.

23. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி திட்டப்பணிகள்.

24. மேம்படுத்தப்பட்ட அரசு நில மேலாண்மை அமைப்பு.

25.மாநிலத்தின் சுற்றுலா மேம்பாடு.

26.விளையாட்டுத் திறன் கண்டறிதல் மற்றும் மேம்பாட்டு திட்டங்கள்.

27.மாநிலம் முழுவதும் உள்ள முக்கிய தொழில் பூங்காக்கள்.

28.தற்போதுள்ள விமான நிலையங்கள் மற்றும் பசுமை விமான நிலையங்களின் விரிவாக்கம்.

29.குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு பெரும் தொகுப்புகள் உருவாக்கம்.

30.ஒருங்கிணைந்த சாலை பாதுகாப்பு இயக்கம்.

திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் தேவைகளின் அடிப்படையில் முதன்மைத் திட்டங்களின் பட்டியலை அவ்வப்போது அரசு மாற்றியமைக்கும்.

### 3.3.1. உயர்மட்ட கண்காணிப்பு குழு

அரசின் முதன்மைத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காகவும், கண்காணிப்பதற்காகவும்

உயர்நிலை கண்காணிப்புக் குழு ஒன்று அரசால் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | பதவி | நிலை |
|---|---|---|
| 1 | அரசு தலைமைச் செயலாளர் | தலைவர் |
| 2 | அரசு செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 3 | அரசு செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | உறுப்பினர்-செயலர் |
| 4 | தொடர்புடைய துறைகளின் அரசு செயலாளர்கள் | உறுப்பினர்கள் |

இந்த உயர்நிலை கண்காணிப்புக் குழுக் கூட்டங்களில் முதன்மை திட்டங்களின் முன்னேற்றம், சவால்கள் மற்றும் பிரச்சினைகள் குறித்து விரிவான கலந்தாலோசனை மேற்கொள்ளப்படும். இக்கூட்டங்களில், மாவட்டக் கண்காணிப்பு

அலுவலர்களின் அறிக்கைகள் அடிப்படையில் முதன்மைத் திட்டங்களில் கொள்கை அளவிலான மாற்றங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளில் திருத்தம் ஆகியவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## 3.4. கருப்பொருள் அடிப்படையிலான (Theme based) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

தொலைநோக்குத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் பல்வேறு நிர்வாகத் துறைகளின் கீழ்வருவதால், ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம் அவைகளை சிறப்பாக நிறைவேற்ற இயலும். எனவே இலக்குகளை நிறைவேற்ற, கருப்பொருள் அடிப்படையிலான கண்காணிப்பு அணுகுமுறை பின்பற்றப்படும். இதன்படி ஒரு பொதுவான இலக்கினை அடைய அது தொடர்புடைய பல்வேறு

துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைந்த மற்றும் ஒத்திசைக்கப்பட்ட முறையில் கண்காணிக்கப்படும்.

இதன் மூலம், திட்டங்களின் பலன்கள் முழுமையாகவும், கூடுதலாக அடைய பெறுவதையும் சம்மந்தப்பட்ட துறைகள் தங்கள் பங்களிப்பினை மேம்படுத்திடுவதற்கான வாய்ப்பும், நடைமுறை சிக்கல்களை களைவதற்குரிய தெளிவும் பெற ஏதுவாக அமையும். இவ்வகையில் தற்போது பின்வரும் பன்னிரெண்டு கருப்பொருள் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

### 3.4.1. நீர்வளங்களை மேம்படுத்துதல்

நிலத்தடி நீர் மட்டம், மேற்பரப்பு நீர் சேமிப்புத் திறன், மண்ணின் ஈரப்பதம், பசுமைப்பரப்பு ஆகியவற்றை அதிகரிப்பது என்பது, தடையின்றி குடிநீர் மற்றும்

பாசனத்திற்கு தேவையான நீரினை வழங்குவதை உறுதிசெய்திட மிகவும் அவசியம். நீர்வளத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் நீர்நிலைகள் பாதுகாப்பு, ஆறுகள் பாதுகாப்பு, நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைத்தல், மண் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு, கழிவு நீர் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு, கழிவு நீர் மேலாண்மை, காடு வளர்ப்பு போன்ற திட்டங்கள் பொதுப்பணித் துறை (நீர்ப்பாசனம்), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, வேளாண்மை மற்றும் உழவர் நலம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம், போன்ற பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகிறது. நீர்நிலைகளை கணக்கெடுப்பு செய்தல், அடையாளம்

காண்பது மற்றும் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்தல் ஆகியவற்றில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை துணைப் பங்களிக்கிறது. நீர்வளங்களை மேம்படுத்தும் அரசின் தொலைநோக்கு திட்டத்தை விரைவாக அடையச் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, இக்கருப்பொருள் தொடர்புடைய அனைத்து துறைகளின் பணிகளையும் ஒருங்கிணைக்கும்.

### 3.4.2. வேளாண் உற்பத்தி, விளைச்சல் மற்றும் சந்தைப்படுத்துவதற்குரிய இணைப்புகளை உருவாக்குதல்

போதுமான பாசன நீர், விதைகள் மற்றும் நாற்றுகள், உரங்கள், பயிர்க் கடன் மற்றும் விரிவாக்க நடவடிக்கைகள் போன்றவை, வேளாண் உற்பத்தி மற்றும் விளைச்சலை பெருக்குவதற்கு தேவைப்படும் மிகவும் அடிப்படையான செயல்பாடுகள் ஆகும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும் நேரடிக் கொள்முதல் நிலையங்கள், தொழில் துறையால் நடத்தப்படும் சர்க்கரை ஆலைகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் விளைபொருள் விற்பனைக் குழு, வேளாண் விற்பனைத் துறை ஆகியவை, வேளாண் பொருட்களின் பின்செய் நேர்த்தி நிலையில் விளைபொருட்களை கொள்முதல் செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் உதவியாக உள்ளது.

வேளாண்மை மற்றும் உழவர் நலம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை போன்றவை உழவர்களுக்குத் தேவையான மேற்கண்ட உதவிகளை செய்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய கைபேசி செயலி மூலமாகவும் இத்துறைகளின்

செயல்பாடுகள் நேர்த்தியாக மேம்பட வழிவகைகள் உள்ளன. தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டங்களான அடுத்த 10 ஆண்டுகளில் 11.75 இலட்சம் எக்டர் கூடுதலாக பயிரிடுதல், 10 இலட்சம் எக்டர் அளவுள்ள இருபோக சாகுபடி நிலங்கள் இரு மடங்காக, அதாவது, 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல், உணவு தானியங்கள் மற்றும் தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, கரும்பு ஆகிய பணப்பயிர்களுக்கான வேளாண் ஆக்கத்திறனில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகம் இடம் பெறச் செய்தல், போன்ற நோக்கங்களை நிறைவேற்ற மேற்காணும் திட்டங்களை செயல்படுத்தும் துறைகளை ஒருங்கிணைத்து இத்துறை செயல்படும்.

### 3.4.3. அனைவருக்கும் வீடு

வீட்டுவசதித் திட்டங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை – தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – தமிழ்நாடு ஆதிதிராவிடர் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகிய துறைகளின் மூலம் வரையறுக்கப்பட்ட நகர்ப்புர மற்றும் ஊரக ஏழை மக்களுக்காக செயல்படுத்தப்படுகிறது. நிலம் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் வருவாய்த்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. புதுமையான, விரைவான கட்டுமானத் தொழில்நுட்பத்தை செயல்படுத்திட பொதுப்பணித் துறையின் ஆலோசனையும் பெறப்பட வேண்டிய அவசியம் உள்ளது. "10 ஆண்டுகளில் ஊரகப்

பகுதிகளில் 20 இலட்சம் புதிய காண்கிரீட் வீடுகள் மற்றும் நகர்ப்புரங்களில் 9.75 இலட்சம் புதிய காண்கிரீட் வீடுகள் கட்டப்படும்" என்ற இந்த அரசின் தொலைநோக்கு இலக்கை விரைவாக அடைய தொடர்புடைய துறைகளுக்கு இடையே தேவையான தகவல் பரிமாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பை சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை முனைப்புடன் ஏற்படுத்தும்.

### 3.4.4. கல்வி தரத்தை உயர்த்துதல்

கற்றல் செயல்திறன் குறியீடுகளை மேம்படுத்த தரமான கல்வியை வழங்கவேண்டிய கடமை பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வி துறைகளைச் சார்ந்ததாகும். அதே போன்று, பள்ளி/கல்லூரி மாணவர்கள் கல்வி கற்பதற்கு புதிய கட்டடங்கள் கட்டித் தருவது மற்றும்

அதனைப் பராமரிப்பது, சுகாதார உட்கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆகிய உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் பணிகளை பொதுப்பணி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை ஆகிய துறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும், உயர் செயல்திறன் தரக்குறியீடு, NIRF தர வரிசையில் ஏற்றம், NAAC அங்கீகாரம் ஆகிய தரக்குறியீடுகளை மேம்படுத்துவதும் மிக முக்கியமாகும். எனவே, கற்றலின் பலன்களை மேம்படுத்துவதற்கு மேற்கண்ட துறைகளின் ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கைகள் அவசியமாகிறது.

### 3.4.5. சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துதல்

"ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு" நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 3ன் குறிக்கோளை உறுதிப்படுத்துவதற்கு, பொது சுகாதாரம், தரமான மருத்துவக் கல்வியை உள்ளடக்கிய வலுவான மருத்துவ உட்கட்டமைப்பு ஆகியவை அவசியமானதாகும். சுகாதார உட்கட்டமைப்பு, அனைத்து வயதினரிடையேயும் தனிநபர் சுகாதார பழக்க வழக்கங்களை மேம்படுத்துதல், அங்கன்வாடி மற்றும் பள்ளிகளில் சிறந்த ஊட்டச்சத்து வழங்குதல், ஆகியவை உடல் வளர்ச்சி குறைபாடுகளைத் தடுக்கவும், தொற்று மற்றும் தொற்றா நோய்கள் ஏற்படுத்தும் இன்னல்களை சமாளிப்பதற்கும், முக்கியமானதாகும். மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு, சமூகநலம் மற்றும் மகளிர் உரிமை, பள்ளிக் கல்வி, பொதுப்பணித்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆகிய துறைகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கை மூலம் இதை அடைய முடியும்.

### 3.4.6. அனைவரும் உள்ளடங்கிய சமூகம் (Social Inclusion)

சமூக நீதி, பாலின சமத்துவம் மற்றும் சமுதாயத்தின் அனைத்து பிரிவு மக்களின் பங்கேற்புடன் பெறப்படும் வளர்ச்சி, ஆகியவை “எவரும் விடுபடாமல், அனைவருக்குமான சமூகம்” என்பதை உறுதி செய்வதற்கு மிக முக்கியமானதாகும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், சமூகநலம் மற்றும் மகளிர் உரிமை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, மாற்றுத்திறனாளிகள் நலம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி - தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், பொது மற்றும்

உள்துறை ஆகிய தொடர்புடைய முக்கியமான துறைகள், அரசின் இந்த உன்னதமான தொலைநோக்கினை அடைய ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது.

### 3.4.7. உட்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சி

சாலை, இரயில் மற்றும் விமானப் போக்குவரத்து, நீர், மின்சாரம் மற்றும் சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்புகளை உருவாக்கித் தருவது என்பது, தொழில் மயமாக்கலை விரைவுபடுத்துவதற்கான முக்கியத் தேவையாகும். இந்த கட்டமைப்பு வசதிகளை துரிதமாக அடைவதற்கு, போக்குவரத்து, எரிசக்தி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள், பொதுப்பணி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, சுற்றுச்சூழல்,

காலநிலை மாற்றம் மற்றும் வனம், உள்துறை ஆகிய துறைகள் தொழில்துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைகளுடன் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகிறது. இந்த அரசின் தொலைநோக்குத் திட்டங்களில் இடம் பெற்றுள்ள இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எய்தல், மாநில பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ரூ.35 இலட்சம் கோடிக்கு மேல் உயர்த்துதல் மற்றும் தனி நபர் வருமானத்தை ஆண்டுக்கு ரூ. 4 இலட்சத்திற்கு மேல் உயர்த்துவது போன்ற குறிக்கோள்களை அடுத்த பத்தாண்டுகளுக்குள் அடைய ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியமானதாகும்.

### 3.4.8 திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு

இளைஞர்களுக்கான திறன் பயிற்சி, உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்குவது மட்டுமல்லாமல் அவர்களை சுயதொழில் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களை அமைப்பதற்குத் தேவையான திறனையும் மேம்படுத்துகிறது. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, வேளாண்மை மற்றும் உழவர் நலன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, பள்ளிக் கல்வி, உயர்கல்வி, தொழில் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் நிறுவனங்கள் ஆகிய துறைகள் மூலம் பல்வேறு திட்டங்களின் கீழ் திறன்

மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய பயிற்சி தேவைப்படும் நபர்களை அடையாளம் காண்பது மற்றும் பயிற்சி பெற்ற நபர்களை வேலை வாய்ப்பு பெறுவது அல்லது தங்களின் விருப்பத்திற்கேற்ற வணிக நிறுவனங்கள் தொடங்குவதை கண்காணித்து உதவுவது முக்கியமானதாகும். ஒவ்வொரு ஆண்டும் 10 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் என்ற இந்த அரசின் முக்கியமான தொலைநோக்கு திட்டத்தை இந்த துறைகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கை மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

### 3.4.9. முறையான கடன் (Institutional Credit)

ஊரக மற்றும் நகர்ப்புர ஏழை மக்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள்

நிறுவனங்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில், நியாயமான நிபந்தனைகளுடன், முறையான கடன் கிடைப்பதற்கு, வழிவகை செய்வது குறிப்பாக, இந்த கடினமான COVID-19 தொற்றுநோய் காலங்களில் மிக அவசியமானதாகும். மேலும், ஏழை மக்களை வறுமைக் கோட்டிலிருந்து மீட்கவும் அல்லது அவர்களை தீவிர வறுமையான நிலைக்குச் செல்லாமல் தடுப்பதற்கும் இந்த நடவடிக்கை உதவும். முறைசாரா அமைப்புகளின் நெறிமுறையற்ற கடன் வழங்கும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதன் காரணமாகவும் இந்த முன்னெடுப்பு மிகவும் அவசியமாகிறது. அடுத்த பத்தாண்டுகளில் வறுமைக் கோட்டுக்குக் கீழே எந்த குடும்பமும் இல்லை என்ற தொலைநோக்கினை தமிழ்நாடு அடைய, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்

கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் நிறுவனங்கள் மற்றும் நிதித் துறைகள் ஒன்றிணைந்து செயல்பட்டு தேவையான கடன் இணைப்புகளை கொண்டு வர வேண்டியது அவசியமாகிறது.

**3.4.10. மரபு மற்றும் பண்பாடு**

மாநிலத்தின் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள், தமிழ்நாட்டின் பழங்கால பண்பாடு மற்றும் நாகரிகம் பற்றிய பல அரிய தகவல்களை அளித்துவருகிறது. இந்த கலைப்பொருட்கள் மற்றும் அகழ்வாராய்ச்சி இடங்கள் பொதுப்பணித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் பங்களிப்புடன்

ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த இணைப்பை இத்துறை முனைப்புடன் ஏற்படுத்தும்.

### 3.4.11. சுற்றுச்சூழல் சமநிலை

மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில், வனபரப்பு மற்றும் மரப்பரப்பை 33 விழுக்காடாக அதிகரிப்பது என்பது இந்த அரசின் முக்கிய தொலைநோக்குத் திட்டங்களில் ஒன்றாகும். அடுத்த 10 ஆண்டுகளில் இந்த இலக்கை அடைய பல துறைகள் மற்றும் மக்களின் பங்களிப்பு அவசியமாகிறது. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம், தமிழ்நாடு நதி பாதுகாப்பு திட்டங்கள் போன்ற அரசின் முக்கிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகள், வேளாண்மை மற்றும் உழவர் நலன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், கால்நடை பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும்

ஊராட்சி ஆகிய பல்வேறு துறைகளின் ஒருங்கிணைத்த பங்களிப்புடன் இந்த இலக்குகளை திறம்பட விரைந்து அடைதல் அவசியமாகிறது.

### 3.4.12. தரவு நிருவாகம் (Data Governance)

பல்வேறு அரசுத் துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களின் பயனாளிகள் தரவுகள், தொடர்புடைய துறைகள் மூலம் தனித்தனியாக சேகரிக்கப்பட்டுள்ளது. எனினும், பல்வேறு நலத்திட்ட தேவைகளுக்கான எதிர்கால திட்டமிடல் மற்றும் கொள்கை முடிவுகளுக்கும், சமூக ஏற்றதாழ்வு நிலையினை உரிய வகையில் அறிந்து கொள்வதற்கும், இந்த விவரங்கள் போதுமானதாக இல்லாததால், அனைத்து துறைகளினிடையே ஒருங்கிணைந்த அணுகுமுறை வாயிலாக தரவு பெறுவது

அவசியமாகிறது. இவ்வாறு, ஒற்றை ஆதார முறையில் தரவுகளைக் சேகரிக்கும் பொழுது, இலக்கு மக்கள் அனைவருக்கும் நலத்திட்டங்கள் சென்றடைவதை உறுதி செய்வதற்கும், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்வது எளிதாவதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

மேற்குறிப்பிட்ட அனைத்து துறைகளினிடையே ஒருங்கிணைந்த அனுகுமுறை மூலம் மேற்கெள்ளப்படும் கருப்பொருள் அடிப்படையிலான கண்காணிப்பு வாயிலாக ஏற்படும் மிகுதியான பலன்கள் முழுமையான வளர்ச்சியை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 3.5 மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/ முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்களை, மாவட்ட கண்காணிப்பு

அலுவலர்களாக அரசு நியமிக்கிறது. கண்காணிப்பு அலுவலர்கள், மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மீது கள ஆய்வு மேற்கொண்டும், ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், திட்டங்களை விரிவாக செயல்படுத்திட தக்க ஆலோசனைகளையும், இடையூறுகளுக்கான தீர்வுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட நிலையிலான அலுவலர்களுக்கு வழங்குகின்றனர்.

கண்காணிப்பு அலுவலர்களுக்கான பல்வேறு துறைகளின் முக்கிய திட்டங்களை ஆய்வுப் படிவங்கள், கருப்பொருள் அடிப்படையிலான கண்காணிப்புக்கு ஏற்றவாறு இருக்கும். இதனுடன், முதன்மை திட்டங்களை தனியாக ஆய்வு மேற்கொள்வார்கள்.

ஆய்வுகளின் அடிப்படையில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் துறைகளுக்கிடையேயான பிரச்சனைகளை களைவதற்கு ஏதுவாக துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு மட்டுமல்லாமல் நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் சிறப்புத் தன்மைகளை மதிப்பிடுதல் மற்றும் அரசு அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கை மாற்றங்கள் குறித்தும் பரிந்துரைப்பர். திட்டங்களில் கவனிக்கப்படவேண்டிய இனங்கள், முக்கியமான கருத்துக்கள், எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள், திட்டத்தின் மேம்பாடு மற்றும் மாற்றங்கள் ஆகியவை குறித்த கண்காணிப்பு அலுவலர்களின் பரிந்துரைகள்

தொகுக்கப்பட்டு, அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் வழியாக முதலமைச்சர் அலுவலகத்திற்கு சமர்பிக்கப்படும்.

**3.6 கள ஆய்வுகள்**

பல்வேறு துறைகளிலிருந்து சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையில் பணிபுரியும் அலுவலர்கள், அவ்வப்போது கள ஆய்வு பணிகளை மேற்கொள்வதுடன் முதன்மைத் திட்டங்களின் செயல்பாடுகள், சிறப்புத் திட்டங்களின் செயல்பாடுகள், ஆகியவற்றை, ஆய்வு செய்து மாவட்ட அளவில் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றை அறிக்கைகளாக அரசுக்கு சமர்ப்பிப்பார்கள்.

## 4. முக்கிய செயல்திறன் குறியீடுகள் (Key Performance Indicators)

பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைத் திறம்பட கண்காணிப்பதற்காக, முக்கிய செயல்திறன் குறியீடுகள் வரையறுக்கப்பட்டு அதன் அடிப்படையில், அரசு துறைகள் செயல்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களினால் ஏற்படும் முன்னேற்றங்கள், இத்துறையால் கண்காணிக்கப்பட உள்ளது.

நீடித்த, நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG), நல் ஆளுமை குறியீடுகள் (GGI) மற்றும் பல்வேறு அமைப்புகளால் வெளியிடப்படும் சமூக – பொருளாதார வளர்ச்சி குறியீடுகளை கணக்கில் எடுத்துக் கொண்டும், பிற துறைகளுடன் கலந்து ஆலோசித்தும், முக்கிய செயல்திறன் குறியீடுகள், தெரிவு செய்யப்பட்டு கண்காணிக்கப்படும்.

## 5. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முன் முயற்சிகள்

பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பது மட்டும் அல்லாது, அரசின் சில தனித்துவ முயற்சிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படும். இந்த முன்முயற்சிகள் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

### 5.1 முதலமைச்சர் முகப்புப் பலகை (Chief Minister Dashboard)

முதலமைச்சர் முகப்புப் பலகை, பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்படும். இம்முகப்புப் பலகை பலதரப்பட்ட அறிக்கைகள் மற்றும் அறிவிப்புகளை வழங்க கூடியதாக இருக்கும். முக்கிய செயல்திறன் குறியீடுகளின் அடிப்படையில் தொடர்புடைய துறைகளின்

செயல்பாடுகள் முதலமைச்சர் முகப்புப் பலகை வாயிலாக கண்காணிக்கப்படும். இந்த முகப்புப் பலகை, தகவல் தொழில்நுட்பவியல் துறையால் உருவாக்கப்படும்.

## 5.2 முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம் (Chief Minister Fellowship Programme)

மாநிலத்திலுள்ள இளைஞர்களின் திறமைகளில் இந்த அரசு அதிக அளவில் நம்பிக்கை கொண்டுள்ளது. அரசு சேவைகளை மேம்படுத்த இளைஞர்களின் வளத்தை பயன்படுத்தி முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் செயல்படுத்தப்படும். தகுதியான நபர்களை அவர்களின் தொழில்முறை மற்றும் கல்வி பின்புலங்களின் அடிப்படையில், ஊக்க ஊதியத்துடன் இரண்டு ஆண்டுகால புத்தாய்வு பயிற்சி வழங்கப்படும். இத்திட்டத்திற்கு தகுதி வாய்ந்த இளம் வல்லுநர்கள் வெளிப்படைத்

தன்மையுடன் தேர்ந்து எடுக்கப்படுவார்கள். தேர்வு பெற்ற இளைஞர்கள், மாநில அரசின் பல்வேறு முதன்மை மற்றும் முன்னுரிமை திட்டங்களை செயல்படுத்துவதில் நேரடியாக ஈடுபடுத்தப்படுவார்கள். மேலும், முதலமைச்சர் அலுவலகம் / சம்மந்தப்பட்ட துறைகளின் வழிகாட்டுதலில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்வர். இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை கண்காணித்து, செயல்பாட்டில் பிரச்சனைகள் இருப்பின் அவற்றை களைவதற்கும், திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்துவதற்கும் தேவையான முடிவுகளை எடுப்பதற்கும் உதவியாக இருப்பார்கள். பங்கேற்பாளர் துறைகளுடன் கலந்தாலோசித்து இத் திட்டத்தை உருவாக்கவும், செயல்படுத்தவும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக செயல்படும்.

## 5.3. மாணவர்களுக்கான நிருவாகச் செய்முறைப் பயிற்சித் திட்டம் (Students Internship Programme)

இந்தியாவில் உயர்கல்வி மொத்த சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு முதன்மையாக உள்ளது. இதில் 50 விழுக்காடுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் சேர்கின்றனர். இந்த அரசு, மிகவும் திறமை வாய்ந்த இளைஞர்களுக்கு அரசின் செயல்பாடுகளில் செய்முறை அனுபவம் அளிக்கும் வகையில் குறுகிய கால "மாணவர்களுக்கான நிர்வாகச் செய்முறைப் பயிற்சித் திட்டத்தை" அறிமுகப்படுத்தி சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையை ஒருங்கிணைப்புத் துறையாக கொண்டு செயல்படுத்த உள்ளது. இந்த முன்முயற்சியின் மூலம், மாநிலத்தில் அரசு – மாணவர்கள் – கல்வி நிலையங்களின்

இடையே இணைப்பும், வளர்ச்சி நடவடிக்கைகளில் அவர்களின் பங்கேற்பும் அதிகரிக்க உதவும். NIRF தரவரிசையின் படி உயர் நிலையிலுள்ள பல்கலைக்கழகம் / கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த வாய்ப்பு வழங்கப்படும். பயிற்சிக்கான தலைப்புகள் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் துறைகளுடன் கலந்தாலோசித்து தேர்வு செய்யப்படும்.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, விரிவான வழிக்காட்டி நெறிமுறைகளை உயர்கல்வித் துறை மற்றும் இதர பல்கலைக்கழகங்களின் நிர்வாகக் கட்டுப்பாடு கொண்டுள்ள துறைகளுடன் கலந்து ஆலோசித்து உருவாக்கும்.

## 5.4. ஒருங்கிணைந்த தரவுத்தளம் உருவாக்குவதற்கான விரிவான கணக்கெடுப்பு

தரவுகளின் அடிப்படையிலான நிருவாகம் என்பது இந்த அரசின் கொள்கையாகும். பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களுக்கான தரவுகளை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக செயலி மூலம் அனைத்து நகர்ப்புரம் மற்றும் ஊரக குடியிருப்புகளில் விரிவான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.

திறம்பட கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதற்கு இந்த கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்படும் தரவுகள் உதவியாக இருக்கும்.

இந்தப் பணியினை மேற்கொள்வதற்காக களப்பணி அலுவலர்கள் குழு உருவாக்கப்படும். ஒவ்வொரு

பரிவர்த்தனையின் போதும் தரவு மேம்படுத்தப்படும். கணக்கெடுப்பு மேற்கொள்வதற்கான கைபேசி செயலி உருவாக்குதல், தரவு தளங்களை பராமரித்தல், களப்பணி ஆய்வு மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு ஒருங்கிணைப்புத் துறை (Nodal Department) தெரிவு செய்யப்படும். இந்த தரவை பயன்படுத்தவிருக்கும் துறைகளுடன் கலந்தாலோசித்து தரமான கணக்கெடுப்புப் படிவம் தயாரிப்பதற்கு இத்துறை உதவி புரியும்.

## 5.5 கள ஆய்வுகள் கண்காணிப்பு கைபேசி மென்பொருள் செயலி

பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் பயன்கள் சிறந்த முறையில் சென்றடைவதற்குரிய தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்துவதற்கு இந்த அரசு

முன்னுரிமை அளித்து வருகிறது. அரசுத்துறைகளில் பணிபுரியும் களப்பணி அலுவலர்கள் ஆய்வுகள்/விரிவாக்க செயல்களை மேற்கொண்டு தங்களது அறிக்கைகளை மேல்நிலை அலுவலர்களுக்கு சமர்பிக்கின்றனர். அதிக எண்ணிக்கையில் இந்த கள ஆய்வு அறிக்கைகள் பெறப்படுவதால் உயர் அலுவலர்கள் உரிய நேரத்தில் ஆய்வு செய்து கண்காணிப்பதிலும், அதன் மீது உடனுக்குடன் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதிலும் சிரமம் ஏற்படுகிறது. எனவே களப்பணி அலுவலர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகள் மற்றும் விரிவாக்க செயல்களை கண்காணிக்கும் தற்போதைய முறைகளை, தற்போதுள்ள தகவல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதன் மூலம் சீரமைத்து கைபேசி செயலி வாயிலாக கண்காணிப்பு மேற்கொள்ள

நடவடிக்கை எடுக்கப்படும். அதனால், பின்வரும் பயன்கள் ஏற்படும்.

❖ ஆய்வுகள்/விரிவாக்கச் செயல்களின் நிகழ்கால கண்காணிப்பு.

❖ ஆய்வுப் பகுதிகளை மைய இடத்திலிருந்து ஒதுக்கீடு செய்து கண்காணிப்பது.

❖ கள ஆய்வு அறிக்கைகள் மற்றும் புகைப்படங்களை எவ்விடத்திலிருந்தும் பார்க்க இயலும்.

❖ ஆய்வு அறிக்கைகள் மற்றும் அறிக்கைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் (Action taken report) குறித்து கண்காணிப்பது எளிதாகும்.

❖ ஆய்வு அறிக்கைகளை நாட்குறிப்பாக (Diary) பயன்படுத்துவது.

❖ துறையின் வலைதளத்துடன் ஒன்றிணைந்து பகுப்பாய்வு

அறிக்கைகளை ஆய்வுக்காக பயன்படுத்துவது.

இச்செயலியானது தேசிய தகவல் மையம் (NIC), சென்னை, மூலம் ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் பல்வேறு துறைகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப மாற்றி அமைத்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

துறைகளின் தேவைகளுக்கேற்ப இச்செயலி வடிவமைக்கப்படுவதற்கு தொடர்புடைய துறைகள் மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியவற்றுடன் இத்துறை ஒருங்கிணைந்து செயல்படும்.

**முடிவுரை**

இந்த அரசு மக்களின் நலனுக்கான அனைத்து ஆக்கபூர்வ பணிகளையும், உணர்வுபூர்வமாகவும், அக்கறையுடனும் செயல்படுத்தி வருகிறது. மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் அரசின்

அர்ப்பணிப்பும், முயற்சிகளும் எப்போதும் போல் தொடர்ந்து மிகவும் வலுவானதாக இருக்கும். இத்தகைய குறிக்கோள்களையும், முன்னுரிமை செயல்பாடுகளையும் நோக்கி செல்லும் பாதையில், ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் அயராது மிகுந்த ஆற்றலுடன் செயல்படும். செயல்பாட்டில் இருக்கும் நலத்திட்டங்களை மேம்படுத்துவற்குரிய ஆலோசனைகளுக்கு செவிமடுப்பதுடன், பிற பகுதிகளில் சிறப்பாக செயல்படும் திட்டங்களையும் கருத்தில்கொண்டு ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் அதே போன்ற நன்மைகள் கிடைத்திடும் வகையில் அரசு முனைப்புடன் செயல்படும்.

**மு.க. ஸ்டாலின்**
**முதலமைச்சர்**